**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 150/2013**
**நாள்.22.04.2026**
**பி.வா.சா.1- சௌந்தரம்**
**த/பெ - சந்தனம்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. என்ன பரிகாரம் கோரி வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், அது சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். குறிப்பிட்டு என்ன பரிகாரம் கோரி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

2. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன என்பது பற்றி தெரியுமா என்றால் சொத்து சம்பந்தமாக விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

3. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சம்பந்தமாக எனது தாயார் தான் வழக்கறிஞரிடம் கூறி எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. மோலப்பாடியூரை சேர்ந்த ஏவரி சேர்வையை எனக்கு தெரியும். அவருக்கு 5 மக்கள் என்றால் சரிதான். கருப்பணன் சேர்வை, சுப்பிரமணி சேர்வை, காளியப்பன் சேர்வை, துரைச்சாமி சேர்வை, கருப்பையா சேர்வை ஆகியோர் ஏவரிசேர்வையின் வாரிசுகள் என்றால் சரிதான். மோலப்பாடியூரை சேர்ந்த பெருமாள் சேர்வையை எனக்கு தெரியும். பெருமாள் சேர்வையின் மகன் மாணிக்கம்சேர்வை மற்றும் ஏவரி சேர்வையின் மூத்த மகன் கருப்பணன்சேர்வை இருவரும் சேர்ந்து கடந்த 21.03.1942ம் தேதியில் வா.சா.ஆ.1ன் படி சிக்குநாகம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளனர் என்றால் சரிதான்.

5. அதன்பின்பு 1943ல் அப்துல்ரகீம் என்பவரிடம் இருந்து கருப்பணன்சேர்வை சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

6. 21.08.1944ம் தேதியில் வா.சா.ஆ.3ன்படி கருப்பணன்சேர்வை நாகம்மாளிடமிருந்து விடுதலைப்பாகபத்திரம் மூலம் சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

7. மேற்படி கிரையங்களின் மூலம் மொத்தம் 21 ஏக்கர் நிலத்தை பெருமாள்சேர்வையின் மகன் மாணிக்கம்சேர்வை, ஏவரிசேர்வையின் மகன் கருப்பணன்சேர்வை ஆகியோர் சேர்ந்து கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். அதன்படி பாதி நிலம் மாணிக்கம்சேர்வைக்கும், மீதமுள்ள பாதி நிலம் கருப்பணன்சேர்வைக்கும் பாத்தியப்பட்டவை என்றால் சரிதான். இதன்படி வாய்க்கரலாக மாணிக்கம்சேர்வையும், கருப்பணன்சேர்வையும் பிரித்துக்கொண்டு அவரவர் பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

8. ஏவரி சேர்வையின் இறப்பிற்கு பின்னர் கருப்பணன்சேர்வை வீட்டிற்கு மூத்தவர் என்ற அடிப்படையில் குடும்பத்தையும், சொத்துக்களையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல, கருப்பணன்சேர்வை 10 1/2 ஏக்கர் நிலத்தை தனியாக அனுபவித்து வந்தார்.ஏவரி சேர்வையின் இறப்பிற்கு பின்னர் கருப்பணன்சேர்வை வீட்டிற்கு மூத்தவர் என்ற அடிப்படையில் சொத்துக்களை பராமரித்து வந்தார் என்றாலும், தற்போது வாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. கருப்பணன்சேர்வை 16.05.1951ம் தேதி எவ்வித திருமணமும் இன்றி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, அவருக்கு திருமணமாகிவிட்டது. அவருடைய மனைவி கருப்பாயம்மாள். கருப்பணன்சேர்வைக்கு திருமணமே ஆகவில்லை என்றாலும், திருமணமாகிவிட்டது என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. கருப்பணன்சேர்வை திருமணமின்றி இறந்துவிட்டார் என்று வழக்குரையில் கூறியதை ஆட்சேபித்து அவருக்கு திருமணம் ஆகிவிட்டது என்ற வாசகங்களுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த விளக்கமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல

11. கருப்பணன்சேர்வையின் 4 சகோதரர்கள் பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் ஆட்சேபணை செய்து தான் வந்தோம். கருப்பணன்சேர்வையின் 4 சகோதரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பட்டா பெற்று அனுபவம் செய்து வருவதற்கு ஆட்சேபணை தெரிவிக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

12. கருப்பணன்சேர்வையின் 4 சகோதரர்களின் வாரிசுகளான வாதிகள் பெயரில் பட்டா பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு வரிவகைகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பட்டா பெற்று அனுபவம் செய்து வருவதை நாங்கள் தடுத்ததால் தான் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தில் நாங்களோ, எங்களது முன்னோர்களோ ஒரு போதும் அனுபவத்தில் இல்லை என்றாலும், தற்போது வாதிகளின் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. பி.வா.சா.ஆ.1 ஆவணமான கொடிவழி ஜாபிதா நாங்களாக உற்பத்தி செய்தது என்றாலும், அது வழக்கிற்கு பின்னிட்டது என்றாலும் சரியல்ல.

15. பி.வா.சா.ஆ.8 ஆவணமான அ பதிவேடானது சர்வே எண்.1259/1, 1264/2, 1261/2, 1261/11, 1261/15 ஆகியவை பெருமாள் சேர்வையின் மகன் கருப்பணைசேர்வை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

16. கருப்பணன்சேர்வைக்கு மூன்று மக்கள் என்றால் இல்லை, சரஸ்வதி, ராஜா, கஸ்தூரி ஆகியோர் கருப்பணன் சேர்வையின் மக்கள் என்றால் சரியல்ல, மருதாயம்மாள் மட்டுமே கருப்பணன்சேர்வையின் வாரிசுகள் ஆவார். கருப்பணன்சேர்வைக்கு மூன்று மக்கள் உள்ளனர் என்றாலும், அதை மறைத்து மருதாயம்மாள் தான் வாரிசு என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**